IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR
MCOP 18/2016

Deposition of RW 1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 17.07.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | அருண் | **Caste** | : | |
| **S/o.** | : | சத்தியமூர்த்தி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை :–**

நான் இந்த மனுவில் 1ம் எதிர்மனுதாரர் ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து அவைகள் யாவும் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய அறிவுரையின் பேரில்தான் என்னுடைய வழக்கறிஞரால் அது தயார் செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

எனக்கு இந்த வழக்கைப்பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். நான் ஆவணங்களின் அடிப்படையில்தான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.7 ஆவணத்தில் விபத்தை ஏற்படுத்திய வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தில் காப்பீடுசெய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். இன்சூரன்சின் பெயர் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் எண் குறிப்பிடவில்லை. அதனால் விபத்தை ஏற்படுத்திய வாகனத்திற்கு காப்பீடு இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் விபத்தை ஏற்படுத்திய வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் காப்பீடு இருப்பதாக குறிப்பிட்டுள்ளதால் எங்கள் நிறுவனம் செலுத்தவேண்டும் என்றால் சரியல்ல.

இழப்பீடு வழங்கவேண்டும் என்பதில் இருந்து எங்கள் நிறுவனத்தை காப்பற்றவேண்டும் என்று பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/—அருண்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டுர்.